March 23, 2014

## மக்கள் குரல் (Makkal Kural) News Paper

- Tamil Newspaper மக்கள் குரல் (Makkal Kural) has published an article on the PERI Job Fair 2014



சரவ் பெரியசாமி தலைமையில் இயங்கும்

# பெரி இன்ஸ்டிடுட் ஆப் டெக்னாலஜியில் 2 நாள் வேலைவாய்ப்பு முகாம்: 30 பிரபல நிறுவனங்கள் பங்கேற்பு

## கல்லூரி முதல்வர் செந்தில்வேலன் தகவல்

சென்னை, மார்ச் 21–

சென்னையை அடுத்த மேற்கு தாம்பரம் மண்ணிவாக்கத்தில் உள்ளது 'பெரி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி. இக்கல்லூரியில் நாளையும், நாளை மறுநாளும் 2 நாட்கள் 'மெகா' வேலை வாய்ப்பு முகாம் நடைபெறுகிறது.

நாளை (சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கு இந்த முகாம் தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறும். அடுத்த நாளும் இதே போல நடைபெறும்.

இந்த முகாமில் இந்தியாவின் பிரபலமான 'இன்போசிஸ், விப்ரோ, ஹெச்.சி.எல், சிடிஎஸ், உள்ளிட்ட நிறுவனங்கள் பங்கேற்கின்றன என்று கல்லூரியின் முதல்வர் என். செந்தில் வேலன் தெரிவித்தார்.

பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை. 2012– 2013–2014 ஆகிய ஆண்டுகளைச் சேர்ந்த டிப்ளமோ, கலை மற்றும் அறிவியல் மாணவர்கள் என்ஜினியரிங், எம்.பி.ஏ., எம்.சி.ஏ., மாணவர்கள் இந்த வேலை வாய்ப்பு முகாமுக்கு ஆஜராகத் தகுதியானவர்கள்.

வேலை வழங்கும் நிறுவனத்தின் நிர்வாகிகளை ஒரே இடத்தில் நேருக்கு நேர் சந்தித்து தங்களுக்கு இருக்கும் திறமையை வெளிப்படுத்தி உரிய வேலை வாய்ப்பை பெற்று கொள்வதற்கு இது ஒரு பொன்னான சந்தர்ப்பம் என்று முதல்வர் செந்தில்வேலன் தெரிவித்தார்.

### இலவச போக்குவரத்து

தாம்பரம், பெருங்களத்தூர், வண்டலூர், காஞ்சிபுரத்திலிருந்து வரும் மாணவ – மாணவிகளுக்கு இலவச போக்குவரத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### 30 நிறுவனங்கள்

இன்போசிஸ், விப்ரோ, ஹெச்.சி.எல்., சிடிஎஸ், டெல், மெட்சிஸ் (எச்பி), போலாரீஸ், எச்டிஎப்சி, கன்வர்ஜிஸ், ராயல் என்பீல்டு,

சேர்மன் சரவ் பெரியசாமி

முதல்வர் செந்தில் வேலன்

உஷா இன்டர்நேஷனல், டிரிஜன்ட், ரெனால்ட்ஸ், ஆன்ஸி ஆகிய பிரபல நிறுவனங்கள், மாணவர்களை நேரில் சந்தித்து, சேர்த்து, தேர்வு செய்யவிருக்கின்றன.

### சரவ் பெரியசாமியின் தொலைநோக்கு பார்வை

'பெரி'–கல்லூரியின் சேர்மன் சரவ் பெரியசாமி, தனியார் நிறுவனங்களின் நிர்வாக ஆளுமைக்கு சிறந்த மாணவ–மாணவிகளை உருவாக்கும் தொலைநோக்கு பார்வையுடன் இக்கல்லூரியை துவக்கியுள்ளார். அடுத்த தலைமுறை இளைஞர்களை பன்னாட்டு குடிமக்களாக உயர்த்திக் காட்டும் ஒரு முயற்சியில் பல்வேறு பாடப் பிரிவுகளிலும், துறைகளிலும் நிபுணத்துவம் வாய்ந்த நிபுணர்களை பணியில் அமர்த்தியிருப்பது சரவ் பெரியசாமியின் சிறப்பு.

### கல்வி – சுகாதார பாதுகாப்பு

கல்வி–சுகாதாரப்–பாதுகாப்பு என்ற இரட்டை கோட்பாடுகளை லட்சியமாக்கி 2007–ம் ஆண்டில் பெரி கல்வி அறக்கட்டளையை துவக்கினார். இளையதலைமுறைக்கு உயர் தரமான கல்வியை தரவேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு 2010–ம் ஆண்டில் 'பெரி' இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி கல்லூரியை துவக்கினார். அமெரிக்காவில் சாப்ட்வேர் சொல்யூஷன்ஸ் இன் கார்ப்பொரேஷன் நிறுவனத்தின்

கல்லூரிகளில் இதுவும் ஒன்று.

ஏஐசிடிஇ அமைப்பு அங்கீகரித்திருக்கும் ஒரு கல்லூரி 'பெரி' என்பதும் குறிப்பிடத்தக்கது. 16 ஏக்கர் நிலப்பரப்பில் இக்கல்லூரி அமைந்துள்ளது.

பி.இ.(மெக்கானிக்கல்), பி.இ. எலக்ட்ரானிக் கம்யூனிகேஷன், பி.இ. (கம்ப்யூட்டர் சயின்ஸ்), பி.இ.(எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ்), எம்.இ. கம்ப்யூட்டர் சயின்ஸ், எம்.இ. அப்ளைய்டு எலக்ட்ரானிக்ஸ்), எம்.இ.(கம்யூனிகேஷன் சிஸ்டம்ஸ்), எம்.இ. (பவர் எலக்ட்ரானிக்ஸ்–டிரைவ்ஸ்) ஆகிய பாடங்களில் பொறியாளர்களை உருவாக்கி வரும் கல்லூரி இது. அதிநவீன வகுப்பறைகள், இன்டர்நெட் வசதி, ஆன்லைன் வசதியுடன் நூலகம், வெளிநாட்டு பல்கலைக்கழகத்துடன் கூட்டு, பாடம் போதிக்கும் பேராசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மூவரையும் ஆன்லைன் மூலம் ஒன்றிணைக்கும் 'ஜூருகு' கற்பிக்கும் நிர்வாக முறை இக்கல்லூரியின் சிறப்புகள் என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார் முதல்வர் செந்தில்வேலன்.

மந்திராலய பீடாதிபதி சுயதீந்திர தீர்த்த சுவாமிகள்